ALL INDIA CIVIL SERVICES COACHING CENTRE

Greenways road,Chennai – 28.

PRESS RELEASE

The All India Civil Services Examination Coaching Centre(AICSCC), functioning under the Government of Tamil Nadu, provides coaching to aspirants preparing for the Civil Services Examinations conducted by the Union Public Service Commission (UPSC), covering all three stages: the Preliminary Examination, Main Examination and Personality Test (Interview).

In particular, the Coaching Centre has been functioning effectively with the objective of providing opportunities and support to aspirants from socially disadvantaged backgrounds and economically weaker sections. As part of this initiative, 79 aspirants who underwent coaching for the 2026 Main Examination at this Centre have qualified for the next stage. This includes 29 women, 4 persons with disabilities and 1 transgender person.

The Centre will conduct a one-month intensive coaching programme for Personality test from 23-11-2026 to 20-12-2026 for candidates who have qualified in the Main Examination. Candidates who wish to participate in this programme are requested to apply through the website **www.civilservicecoaching.com** on or before 5.00 PM on 22.11.2026.

Not only Candidates who received coaching at this Centre, but also other candidates from Tamil Nadu who have qualified in the UPSC Main Examination will be permitted to participate in the personality test training and mock personality tests conducted by the Centre.

For further details, candidates may contact the Centre through the following channels:

* Telephone: 044-24621475

* WhatsApp: 9345766957

* Email: aicscc.gov@gmail.com

Director General of Training

அகிலஇந்தியகுடிமைப்பணித்தேர்வுப்பயிற்சிமையம்

"காஞ்சி", பசுமைவழிச்சாலை, சென்னை–28.

பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்டு வரும் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில், ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான தேர்வுகளை எதிர்கொள்ளும் ஆர்வலர்களுக்கு முதல் நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் ஆளுமைத் தேர்வுகளை எதிர்கொள்ளும் ஆர்வலர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, கிராமப்புறங்களில் உள்ள சமூக பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள ஆர்வலர்கள் பயனடையும் வகையில், இப்பயிற்சி மையம் திறம்பட செயல்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக இப்பயிற்சி மையத்தில் 2026 ஆம் ஆண்டில் முதன்மை தேர்வுக்கு பயின்ற ஆர்வலர்களில் 29 மகளிர், 4 மாற்றுத்திறனாளிகள் மற்றும் 1 மூன்றாம் பாலினத்தவர் உட்பட 79 ஆர்வலர்கள் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். தற்போது இம்மையத்தின் சார்பாக முதன்மைத் தேர்வில் தகுதிப் பெற்ற தேர்வர்களுக்கு ஒரு மாதகால ஆளுமைத் தேர்வு பயிற்சி (23–11–2026 முதல் 20–12–2026) வரை நடத்தப்பட உள்ளது. இம்மாதிரி **ஆளுமைத் தேர்வு பயிற்சியில் பங்கு பெற விரும்பும் ஆர்வலர்கள்**, 22.11.2026 **மாலை 5 மணிக்குள்** www.civilservicecoaching.com **என்ற இணைய தளத்தில் விண்ணப்பிக்கலாம் அல்லது நேரடியாக இம்மையத்திலும் பதிவு செய்து கொள்ளாலாம் .**

இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்ற ஆர்வலர்கள் மட்டுமல்லாமல் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த பிற ஆர்வலர்களும் இம்மையத்தால் நடத்தப்பட உள்ள மாதிரி ஆளுமைத் தேர்வு பயிற்சியில் பங்கு பெற அனுமதிக்கப்படுவர்.

மேலும் விவரங்களுக்கு, 044–24621475 என்ற தொலைபேசி எண் வாயிலாகவும், 9345766957 என்ற புலன எண் (Whatsapp) மூலமாகவும், aicscc.gov@gmail.com என்ற அலுவலக மின்னஞ்சல் மூலமாகவும்தொடர்பு கொள்ளலாம்.

19/11/2026

பயிற்சித் துறைத் தலைவர்